# சங்க இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்

தமிழ்த்துறை
**சர் தியாகராயா கல்லூரி**
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 600 021.
மற்றும்
தமிழ் நாடு தமிழ்ச் சங்கம்
இணைந்து நடத்திய
பன்னாட்டுக் கருத்தரங்கம்

நற்றிணை
குறுந்தொகை
ஐங்குறுநூறு
பதிற்றுப்பத்து
பரிபாடல்
கலித்தொகை
அகநானூறு
புறநானூறு

திருமுருகாற்றுப்படை
பொருநராற்றுப்படை
சிறுபாணாற்றுப்படை
பெரும்பாணாற்றுப்படை
முல்லைப்பாட்டு
மதுரைக்காஞ்சி
நெடுநல்வாடை
குறிஞ்சிப்பாட்டு
பட்டினப்பாலை
மலைபடுகடாம்

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் கா.தியாகராஜன்
முனைவர் ப.தனஞ்செயன்
முனைவர் இரா.ஹேமலதா
ம.முனைவர் பொன். ஆதவன்
முனைவர் ஜா.பவித்ரா
திருமதி செ.ஜோசப் குளோரி

# சங்க இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் கா.தியாகராஜன்

முனைவர் ப.தனஞ்செயன்

முனைவர் இரா.ஹேமலதா

ம.முனைவர் பொன்.ஆதவன்

முனைவர் ஜா.பவித்ரா

திருமதி செ.ஜோசப் குளோரி

வெளியீடு

**தமிழ்த்துறை**

**சர் தியாகராயா கல்லூரி**

பழைய வண்ணாரப்பேட்டை

சென்னை - 600021

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **சங்க இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்** |
| தொகுப்பாசிரியர்கள் | : | முனைவர் கா.தியாகராஜன்<br>முனைவர் ப.தனஞ்செயன்<br>முனைவர் இரா.ஹேமலதா<br>ம.முனைவர் பொன்.ஆதவன்<br>முனைவர் ஜா.பவித்ரா<br>திருமதி செ.ஜோசப் குளோரி |
| உரிமை | : | பதிப்பகத்தார்க்கு |
| நூல்பொருள் | : | ஆய்வுக்கோவை |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பாண்டு | : | ஆகஸ்ட் 2025 |
| அளவு | : | 1/8 டெம்மி |
| பக்கங்கள் | : | 712 |
| விலை | : | ரூ.600/- |
| வடிவமைப்பு | : | கா. குணசேகரன் (7639819399) |
| அச்சு | : | எஸ்.எஸ்.எண்டர்பிரைசர்ஸ்,<br>சென்னை (9940802363) |
| வெளியீடு | : | தமிழ்த்துறை<br>சர் தியாகராயா கல்லூரி<br>பழைய வண்ணாரப்பேட்டை<br>சென்னை - 600021<br>Mob: 9003500499, 8778911868 |
| ISBN No | : | 978-93-343-6460-6 |


*ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களின் பொறுப்புக்குரியவை*

79. சங்க இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்
இயற்கையோடு இயைந்த வாழ்க்கை
*சமுகி* 603

80. சங்க இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்
*ஜெயா மாறன்* 611

81. சங்க இலக்கியங்கள் கூறும் தமிழர் வாழ்வும், வளமும்!
*ரா. ஜெயராமன்* 615

82. நெடுநல்வாடையில் பண்பாட்டு வாழ்வியல்
*முனைவர் தே. தேன்மொழி* 623

83. பத்துப்பாட்டில் பண்பாட்டு முறைமை
*இர. தேன்மொழி* 631

84. குறுந்தொகையில் பண்பாட்டுப் பதிவுகள்
*முனைவர். D. ஜெமிலா மார்ஷல்* 635

85. புறநூல்களில் காணலாகும் பண்பாட்டுப் பதிவுகள்
*முனைவர். வே. கல்பனா* 644

86. சங்க இலக்கியங்களில் சொல்லாடல் பண்பாடு
முனைவர் இரா.ஹேமலதா 649

87. சங்க இலக்கியங்களில் பண்பாட்டு பதிவுகள்
மதிப்புறு முனைவர் கவிதை கணேசன். 657

88. சங்ககாலக் காதலும் திருமணமுறைகளும்
முனைவர் செ ஜெப ஜோதி புஷ்பம் 662

89. பரிபாடலில் பண்பாட்டுப் பதிவுகள்
*முனைவர் கா.சந்தானலெட்மி* 670

90. காதலும் வீரமும் கலந்த சங்க இலக்கியப் பாடல்
டாக்டர் கோவி மாசிலாமணி 678

91. குறுந்தொகையில் பண்பாட்டுப் பதிவுகள்
*முனைவர் ஆ. கண்ணகி* 686

92. பண்டையகால சமூகத்தில் வணிகர் பண்பாடு
*முனைவர்.சொ.சுரேஷ்* 690

93. நற்றிணை காட்டும் தமிழர் பண்பாடு
*முனைவர் கே. இரா. கமலாமுருகன்* 697

94. சங்க இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்
*முனைவர் க.லெட்சுமி* 702

95. வினையே ஆடவர்க்குயிரே
*முனைவர் மு. செண்பகவள்ளி* 708

# நெடுநல்வாடையில் பண்பாட்டு வாழ்வியல்

முனைவர் தே. தேன்மொழி
உதவிப்பேராசிரியர், வேல்ஸ் பல்கலைக்கழகம்
சென்னை – 117

## முன்னுரை

சங்க இலக்கியங்களில் அகத்திணையைச் சேர்ந்ததாகக் கூறப்படும் நக்கீரனார் இயற்றிய நெடுநல்வாடை, ஒரு தலைவியின் உள்ளம் "குளிரும் மழைக்காலத்தில் தலைவன் பிரிந்தவண்ணம், தலைவியின் உள்ளம் அனுபவிக்கும் துயரத்தையும், அதனுக்கான எதிர்வினைகளையும்" முன்வைக்கின்றது. எனினும், இக்காவியம் வெறும் காதல் உணர்வை மட்டுமல்லாமல், அந்நேரத்தில் நிலவும் இயற்கை மாற்றங்கள், மக்களின் வாழ்வியல், தொழில், உணவு, மகளிர் நிலை, போர்த் தொழில் ஆகியவற்றையும் ஓவியமாகப் பதிவு செய்கின்றது. இத்தகைய பண்பாட்டு வாழ்வியலை வெளிக்காட்டும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

## நெடுநல்வாடை

பிரிவால் வருந்திய தலைவிக்கு வாடைக்காற்று தலைவனின் பிரிவை நெடுமையாக்கி வருந்தத்தக்க நெடுவாடையாக இருந்தது. இப்பாட்டு சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர் (தொல்.பொ.54) அகப்பொருளாகவும், வேம்புதலையாத்த நோன்காழெஃகம் (நெ.வா:176) என அடையாளப் பூக்கூறியதால்

அகம் ஆகாது என்பார் உரையாசிரியர், பிற்காலத்தில் இம்மறுப்புரைக்கும் பல உரைகள் எழுந்தன. வினைமேற் சென்ற தலைவனும் பிறரும் தலைவியின் நினையாமல் 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்னும் கொள்கையினராக இருந்தனர். வடக்கிருந்து வரும் வாடைக்காற்று அவர் உடலுக்கும் உள்ளத்திற்கும் நன்மை தருவதாக இருந்ததால் நல்வாடையாக இருந்தது. தலைவன் தலைவி இருவர்பாலும் செய்யப்பட்ட இருவேறுபட்ட தன்மைகளையும் ஒழுங்குபடுத்தி நெடுநல்வாடை என நூலுக்குப் பெயரிடப்பட்டதாகக் கருதப்படுகிறது. வாடை துன்பத்தைக் குறிப்பது; நல்ல அன்பை உணர்த்துவது. 'நெடு" என்பது அழியாமையைத் தெரிவிப்பது. இதற்கண் அழியாது நீளும் நல்வாடை என்று கூறுவார் திரு.வி.க.

**நெடுநல்வாடையின் மரபுக் குறிப்பு**

முல்லைப்பாட்டில் கார்காலத்து மழையின் பின்னணி காட்டப்படுள்ளது. நெடுநல்வாடையில் கூதிர்காலத்து மழை பின்னணி விவரிக்கப்பட்டுள்ளது. அகத்திணைப் பாடல்களில் குறிப்பிட்ட ஒருவரின் பெயர் சுட்டிக்காட்டப்படக்கூடாது என்பது இலக்கிய மரபு. இதற்கு

**"மக்கள் நுதலிய அகனைத் திணையும்**
**சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்"**

**(தொல்.பொருள்.54)**

இதற்கு மு.வ. அவர்கள் கூறும் கருத்து வேலுக்கு வேப்பிலை சூட்டியிருப்பதாக ஒரு சிறு குறிப்பு நூலில் உள்ளது. ஆகையால் இன்னக்குடி என்று புலப்பட்டு விடுவதால் இது அகப்பாட்டு ஆகாது என்று உரையாசிரியரின் கருத்து வேம்பு என்ற அந்த ஒரு சொல் இல்லையானால் அது முழுவதும் கற்பனையான காதற்பாட்டு என எண்ணத் தடை இருக்காது. இலக்கிய மரபு அந்த அளவிற்கு வளர்ந்திருந்த காலம் அது என்கிறார் மு.வ.

பாண்டியன் நெடுஞ்செழியன் மண்ணாசை மீதூர படையெடுத்துச் சென்றிருந்ததை நெடுநல்வாடைக் காட்டுகின்றது. மண்ணாசை காரணமாகப் போரிடுவது வஞ்சித்திணை ஆகும்.

புறத்திணையாகிய வஞ்சித்திணை அகத்திணையாகிய முல்லைத்திணைக்குப் புறனாக வரும். இதை "வஞ்சிதானே முல்லையது புறனே" (தொல்.பொருள்.64) என்று தொல்காப்பியம் தெளிவுப்படுத்துகிறது. எனவே நெடுநல்வாடை முல்லைத்திணையும் வஞ்சித்திணையுமாக அகமும் புறமும் கலந்த நூல் என்பது தெளிவாகிறது.

**நெடுநல்வாடையின் சிறப்பு**

நீண்ட நல்ல வாடைக்காலத்தில் அரசனைப் பிரிந்துள்ள தலைவி எவ்வாறு மனத்துயரோடு வாழ்கிறாள் என்பதைக் கூறுவது நெடுநல்வாடை. பத்துப்பாட்டில் காதல் பற்றி 188 அடிகளால் ஆகிய ஒரு நெடும்பாட்டு, தலைவன் போர்க்களத்துப் பாசறையில் இருக்கின்றான்; தலைவி அவனுடைய பிரிவால் துயருற்று அரண்மனையில் வாடுகிறாள். பாட்டின் முழு அமைப்பும் ஒரு வழிபாடாக தெய்வத்திடம் வேண்டுகோளாக உள்ளது. தலைவியின் துயரைத் தீர்ப்பதற்கு யாராலும் முடியவில்லை; அரண்மனை மகளிர் கொற்றவையை வேண்டிக்கொள்கிறார்கள். போர்க்களத்தில் பாசறையில் தன் கடமையே பெரிதாகக் கொண்டு அதிலேயே மூழ்கியுள்ள வீரப்பெருமானாகிய தலைவன் போரில் விரைவில் வெற்றிபெற்றுத் திரும்புமாறு அருளவேண்டும் என்று போர்த்தெய்வமாகிய கொற்றவையை வேண்டுகிறார்கள். இதுவே பாட்டின் மையப்பகுதியாக அமைகிறது. இதைச்சுற்றி வருணனைகள் அதிகமாக உள்ளன.

> **"வையகம் பனிப்ப வலன்ஏர்பு வளைஇப்**
> **பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென"** (..1-2)

மேகங்கள் வலப்பக்கமாக எழுந்து மழையைப் பொழிந்தன. மிகுதியான மழையால் வாடை மிகுதியாக இருந்தது. இடையர் தாம் மேய்க்கும் ஆநிரைகளை வேற்றுப்புலத்திற்கு ஓட்டிச் சென்று மேயவிட்டனர். கொக்குகளும், நாரைகளும் ஈரமணலில் இருந்துகொண்டு எதிரே வந்த கயல்மீன்களைக் கொத்தித்தின்றன. இதை,

"வண்தோட்டு நெல்லின் வருகதிர் வணங்க;" என்று கூறப்படுவது, அரிசி உள்ளிட்ட முக்கியமான பயிர்கள் குறித்த உணவியல் பார்வையை அளிக்கின்றது. சாமை, தினை, வரகு போன்ற சிறுதானியங்கள் உணவுக்கு முதன்மையானவை என்பதைத் தொல்காப்பியம் கூறுவதும் நினைவுகூரத்தக்கதாகும்.

**போர்த்தொழிலும் வீரவணக்கமும்**

போரில் ஈடுபடுவதும், அதற்கான ஆற்றல், தெய்வ வழிபாடு, வெற்றி விருப்பம் எனும் சமூக நோக்கோடும் ஆழமான உறவுண்டு. மறவர்களின் வீரத்தையும், சமூக மரியாதையையும், கவிஞர் நக்கீரனார் உயர்த்திப் பேசுகின்றார். "களிறு களம் படுத்த பெருஞ்செய் ஆடவர்" (நெடு. 171) எனும் வரியில் போர் நடுநிலையிலுள்ள வீரர்களின் பெருமை ஒளிர்கிறது. "வாள் தோட் கோத்த வன்கண் காளை" (நெடு.182) எனும் வரிகளில், சிறந்த மறவர்களின் ஒப்பற்ற வீரத்தை வணங்குகிறோம். வீரம் விளங்கும் போர்த் தொழிலினைச் செய்வோராகிய வேப்பம்பூ மாலையினைச் சூடிய மறவர்கள், திரண்ட பெரும் துதிக்கைகளை உடைய யானைகளை வீழ்த்தும் படி செய்தனர். இது நக்கீரனார் காலத்தில் போரும், அதன் சமூக கட்டமைப்பும், அரசாட்சியும் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருந்தன என்பதை உணரச் செய்கிறது.

**முடிவுரை:**

நெடுநல்வாடை எனும் அகத்திணை பாடல்களின் தொகுப்பு, வெறும் காதல் அல்லது அகப்பொருளை மட்டுமல்லாது, ஒரு பாரம்பரியச் சமூகத்தின் வாழ்வியல், பண்பாட்டு சார்பு, இயற்கைநிலைகளின் தாக்கம், பெண்களின் உள்ளார்ந்த நிலைகள், தொழில்கள், உணவுகள், தெய்வ வழிபாடு, போர் பண்பாடு போன்ற பரந்த மனிதவுலகப் பதிவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அவர்களது சமூக வாழ்வியலோடு இணைத்து, மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார் தனது நெடுநல்வாடையில் விவரித்துள்ள பாங்கினை இவ்வாய்வுக்கட்டுரை விவரிக்கின்றது. இவ்வுலகத்தைக் கவிஞர்